முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

சயன சூட்சும நூல் (ஜீவநாடி)

**மகான் புகழ்த்துணை நாயனார் சயன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் டி.ராஜேந்திரன், M.A., B.Ed.,
ஓம் ஸ்ரீ காகபுஜண்டர் ஸ்ரீ அகத்தியர் நாடிஜோதிட ஆசிரமம்,
டி.வி.எஸ் டோல்கேட், திருச்சி. செல் 99655 71837

07.08.2013 புதன்கிழமை

1. சூட்சும தேகம் கொண்ட அரசா
சுத்த சன்மார்க்கம் கண்ட அரங்கா
மாட்சிமை புரிந்து உலகோரை
மரணமிலாப் பெருவாழ்வு கொள்ள

2. கொள்ளவே உலக சக்திகளை
குடிலுக்கு அனுகிவரச் செய்து
வல்லமை நாட்டும் ஞானதேசிகா
வள்ளலே உன் புகழைப்பாடி இனிதே

3. இனிதே விஜய நள்ளி திங்கள்
இருபானீர்திகதி கணக்கன் வாரம்
(விஜய வருடம் ஆடி மாதம் 22ஆம் நாள் புதன்கிழமை 07.08.2013)
இனிமைபட சயன சூட்சும நூலை
இயம்பிடுவேன் புகழ்த்துணை நாயனார்யானும்

4. யானுரைக்க யோகம் யாகமென
எல்லா வகை எத்தணித்தும்
ஞானவானாகவிலா வாட்டமுற்று
ஞானிகளை எண்ணி ஏங்குபவர்

5. ஏங்குபவர் எங்குமில்லை சித்தரென
எண்ணிக் கலங்குபவர்கள்
ஓங்காரன் குடிலினை அனுகி
ஓதிடுவேன் சைவ நெறி திளைத்து

6. திளைத்து தீட்சை உபதேசமுடன்
தேசிகாய பரபிரம்மனே அரங்கனே நமஹ என
இளைப்பிலா தத்துவ வேளை மேல்
இனிதே செபித்து சித்தர் பூசை

7. பூசை தொடர்ந்து உண்மைபட
பொறாமை தீகுணம் உள்வரா
ஆசை களவு மாற்றான்மனை நோக்கா
அசைவம் கொள்ளா சுத்த பூசை

8. பூசைதனை பிரம்ம வேளையில்
புகலுவேன் தடைபடா செய்பவர்க்கு
பூசைதனில் ஞானிகள் இரங்கி
பூவுலக வாழ்வில் உயர்வளிப்பர்

9. உயர்வுடனே உருவமாய் அரூபமாய்
உணர்த்தி சித்தும் புரிந்திடுவர்
தயவுகளும் அரங்கன் அருள்பட
தானடைந்து சித்திகள் கூடியே

10. கூடியே தேக ஞான பலமுற்று
கும்பன் தத்துவம் பிசகா வண்ணம்
நாடி அடைந்து நன்மக்களாய்
ஞான லோகம் சேரும் வண்ணம்

11. வண்ணமுடன் மரணமிலாப் பெருவாழ்வு
வல்லமை கண்டும் சிறந்திடுவர்
எண்ணமெல்லாம் அரங்கன் வழிதொடர
இவையுகத்தில் இனிதே காண்பர் மக்களப்பா
சயன சூட்சும நூல் முற்றே.

–சுபம் –

முருகப்பெருமான் துணை

மும்மலக் குற்றத்தாலான இப்புறதேகத்தின் உதவியுடனே, ஆசான் ஞானபண்டிதன் தயவினால் புறதேகத்தினுள்ளேயே ஞானக்கனல்கொண்டு நம்முள் உறைந்துள்ள தூய்மையான மரணமில்லாப் பெருவாழ்வை அளித்து நம்மை கடைத்தேற்றுகின்ற ஒளிபொருந்திய ஞானதேகமாய் விளங்கும் சூட்சும தேகத்தினைக் கொண்ட ஞானஅரசே! அரங்கமகாதேசிகரே! சுத்த சன்மார்க்க நெறிதனை உலகெங்கும் பரப்பி, உலகம் சுத்த சன்மார்க்கத்தினை கடைப்பிடிக்கச் செய்திடும் அரங்கமகாதேசிகரே! அரும் பெரும் செயல்கள் செய்து, உலகினரை மரணமிலாப் பெருவாழ்வினை உலகோரும் அடையும்படி செய்திடவே, தாம் அளவிலா கருணை கொண்டு, உலக சக்திகளையெல்லாம் ஓங்காரக்குடிலிற்கு வரச்செய்து வல்லமைகளை நிகழ்த்தி உலகை காத்து ஞானவழி செலுத்துகின்ற ஞானத்தலைவனே! ஞானதேசிகனே! பெரும் அறங்கள் பலகோடி செய்திட்ட வள்ளல் ஞானியே! கலியுக அவதாரஞானி உமது புகழை உலகறிய கூறியே உமக்கு விஜய வருடம் ஆடி மாதம் 22ஆம் நாள் 07.08.2013 புதன்கிழமையான இன்றைய தினம் புகழ்த்துணை நாயனாராகிய யான் சயன சூட்சும விளக்க நூல் கூறுகிறேன் என்கிறார் அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவரான மகான் புகழ்த்துணை நாயனார்.

இவ்வுலகில் கடவுளை, ஞானிகளை, சித்தர்களை தரிசிக்கவும், ஞானமடையவும் எண்ணி வழித்துறை தெரியாமலும், தக்க வழிகாட்டுதல்கள் இல்லாமலும், தக்க குருநாதர் கிடைக்காமலும் அவரவர் அவரவருக்கு தெரிந்த வழிகளிலெல்லாம் முயன்று யோகங்கள் செய்தும், யாகங்கள் செய்தும் இன்னும் அநேக அநேக வழிகளைக் கடைப்பிடித்து விரதங்கள் இருந்தும் உடலை வருத்தியும், சுவாசப்பயிற்சிகள் செய்தும் உடலை வருத்தக்கூடிய கொடுமையான பல கடினமான பயிற்சிகளை செய்தும் இறுதியில் ஞானவான்களாக ஆக, இயலாமல் வாட்டமுற்றும் சித்தர்கள் தரிசனமோ, ஞானிகள் தரிசனமோ, இறைதரிசனமோ கிடைக்காமல் ஏங்கி ஊரெல்லாம் சுற்றி திரிந்து தவித்து ஏக்கமுற்று இறுதியில் சித்தர்கள் எங்குமில்லையே! எமக்கு அருள் செய்வர் யாரோ? என வழித்துறை தெரியாமல் எண்ணி கலங்குபவர்கள் அவர்தம் ஞான வழிதனில் தெளிவாக சென்றிடவே உலகிற்கோர் ஞான ஆலயமாம், ஞானத்தலைவன் முருகப்பெருமானால் வழி நடத்தப்படுகின்றதும், கலியுகஞானி, கலியுகவரதன் அரங்கமகாதேசிகரின் சீரிய தலைமையில் நடக்கின்ற ஞானசபை அமைந்த அற்புத இடமாம் ஞானிகளெல்லாம் சூழ்ந்து காக்கின்ற உலகமகா சக்திகளெல்லாம் ஒன்றுகூடி அருள் செய்கின்ற புனித தலமாம் ஓங்காரக்குடில்தனை அணுகி உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சைவநெறி திளைத்து ஆசான் அரங்கரிடத்து தீட்சை உபதேசம் அடைந்து அதன்பின்னே“தேசிகாய பரப்பிரம்மனே அரங்கனே நமஹ” எனும் ஆதிமூல குருமந்திரத்தை உபதேசமாக பெற்று அம்மந்திரம்தனை அதிகாலை பிரம்ம முகூர்த்தமாகிய **4.30** மணிமுதல் **6.00** மணிக்குள்ளான வேளையில் இனிதே செபித்து சித்தர்கள் திருவடி பூஜைதனை தொடர்ந்து செய்துவந்து அவரவரிடத்திலுள்ள பொறாமை, தீயகுணம், பேராசை, களவு, பிறன்மனை நோக்காது, அசைவம் கொள்ளாமல் உண்மையுடன் நடந்து சுத்தபூசையாம் சித்தர் திருவடிபூஜைதனை மனமுருகி தொடர்ந்து செய்துவர செய்கின்றவர்களுக்கு அவர்தம் பூசைதனில் ஞானிகள் மனம் இரங்கி பூசை செய்கின்றவர் தம் வாழ்வு உயர்ந்திட அருள் செய்வார்கள். அவர்களது வாழ்வினை நிலை உயர்த்தி அவர்தமக்கு சித்தர்கள் உருவமாயும், அரூபமாயும் தாம் இருப்பதை அவர்தமக்கு உணர்த்தி சித்துகளும் புரிந்திடுவார்கள். பூசிப்பவர் சித்தர்கள் தயவினை ஆசான் அரங்கமகாதேசிகரின் அருளினால் அடைவார்கள். சித்திகள் கூடியே தேகத்தைப்பற்றி அறிகின்ற மெய்யறிவாகிய தேகஞானம் பலமுற்று கும்பமுனியாகிய அகத்தியம் வழிவந்து பிசகாமல் நடந்து நன்மக்களாய் வாழ்ந்து ஞானலோகத்தை அடையக்கூடிய மரணமில்லாப் பெருவாழ்வை அடைகின்ற வல்லமைகளையும் அடைந்து சிறந்திடுவார்கள். அவர்களது சிந்தை முழுதும் சிதறாமல் அரங்கமகாதேசிகர் வழியில் தொடர்ந்திட இவ்வுலகில் இந்தவித நன்மைகளை இனிமையோடு காண்பார்கள், ஞானமடைய ஏங்குகின்ற மக்களெல்லாம் என தமது சயன சூட்சும ஆசிநூல் மூலம் உலகஞானத்தேடல் உள்ளவர்கள் அறிந்து தெளிவடைய கூறுகிறார் மகான் புகழ்த்துணை நாயனார் கடைத்தேறும் உண்மை வழிகூறியே.

–சுபம்–